பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4

**18 12 2025** **7 15**
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவின் நாகரிக நெறிமுறைகள் உலகளாவிய நல்லிணக்கத்திற்கு தொடர்ந்து உத்வேகம் அளிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. நாட்டில் தொலைதொடர்பு உபகரணங்களின் ஏற்றுமதி கடந்த 5 ஆண்டுகளில் 72 சதவீதம் அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

3. மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், கேரளா ஆகிய மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிகோபார் யூனியன்பிரதேசத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ் கணக்கீட்டுப் படிவங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

4. ஹிமாச்சலப்பிரதேசம், உத்தரப்பிரசேதம், பிஹார், ஜார்கண்ட் மற்றும் ஒடிசா மாநிலங்களின் சில பகுதிகளில் 2 நாட்களுக்கு கடும் பனிமூட்டம் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலகக் கோப்பை **Roll Ball** சாம்பியன் போட்டியில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் பிரிவினர், கென்ய அணியினரை எதிர்கொள்கின்றனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவின் நாகரிக நெறிமுறைகள் உலகளாவிய நல்லிணக்கத்திற்கு தொடர்ந்து உத்வேகம் அளிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஸ்ரீ குரு தேக் பகதூரின் 350வது தியாக தினத்தையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் உரையாற்றிய அவர், உலகளாவிய அமைதி மற்றும் மதநல்லிணக்கத்தின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

அப்போது யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கனியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடலை மேற்கோள்காட்டினார்.

ஸ்ரீ குரு தேக் பகதூர் துணிச்சல் மிக்கவராக திகழ்ந்தார் என்றும், அவரது வாழ்க்கையும் தியாகமும் மனித சமூகத்திற்கு உரியது என்று குறிப்பிட்டார்.

ஸ்ரீ குரு தேக் பகதூர் அரசியல் அதிகாரத்திற்காக செயல்படாமல் தனிநபர்கள் உரிமைக்காக தியாகம் செய்தார் என்றும் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

<<<<>>>>

ஓமன் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அந்நாட்டு மன்னர் **Haitham Bin Tarik** உடன் இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

அத்துடன் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் பரஸ்பரம் இருதரப்பு நலன் சார்ந்த அம்சங்களையும் பரிமாறிக்கொள்கின்றனர்.

இந்தியா - ஓமன் இடையே விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் இரு தலைவர்கள் முன்னிலையில் கையெழுத்தாகிறது.

பின்னர் அங்கு நடைபெறும் வர்த்தக கூட்டத்திலும், இந்திய வம்சாவளியினர் இடையேயும் பிரதமர் உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டில் தொலைதொடர்பு உபகரணங்களின் ஏற்றுமதி கடந்த **5** ஆண்டுகளில் **72** சதவீதம் அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், **2020-21**ஆம் ஆண்டில் **10** ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு தொலைதொடர்பு உபகரணங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில்

கடந்த நிதியாண்டில் இது 18 ஆயிரத்து 406 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்று கூறினார்.

தொலைதொடர்புத்துறையில் இந்தியா சுயசார்பு நிலையை நோக்கி விரைவாக செயல்படுவது மட்டுமின்றி இத்துறையில் உலகளவில் தலைமைத்துவம் வகிக்கும் அளவிற்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், நாட்டில் தற்போது 5G சேவை சந்தாதாரர்களின் எண்ணிக்கை 36 கோடியா உள்ளது என்று கூறினார்.

இந்த எண்ணிக்கை 2030ஆம் ஆண்டுக்குள் 100 கோடியை எட்டிவிடும் என்று கூறினார்.

நாட்டில் உள்ள 778 மாவட்டங்களில் ஏற்கனவே 767 மாவட்டங்களில் 5-G சேவை கிடைப்பதாக திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா குறிப்பிட்டார்.

<<<<>>>>

காப்பீடு சட்டங்கள் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன் மூலம் இந்திய காப்பீட்டு நிறுவனங்களில் நேரடி அன்னிய முதலீட்டு வரம்பு 74 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக அதிகரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

காப்பீட்டுத் துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதையும், காப்பீடுதாரர்களின் நலனைப் பாதுகாப்பதை உறுதி செய்வதையும் இந்த மசோதா நோக்கமாக கொண்டுள்ளது.

அத்துடன் காப்பீட்டு நிறுவனங்கள் எளிதாக வர்த்தகம் செய்வதை மேம்படுத்தவும், ஒழுங்குமுறையில் வெளிப்படைத்தன்மையை கொண்டுவர உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவையில் நடைபெற்ற இதுகுறித்த விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், 2014ஆம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பதவியேற்றது முதல் காப்பீட்டுத் துறையில் சிறந்த சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டின் உண்மையான வளர்ச்சிக்கு மக்கள், வர்த்தகம் மற்றும் வேளாண்மைக்கு பரந்த அளவிலான காப்பீடு தேவைப்படுவதாக அவர் வலியுறுத்தினார்.

ஊரகப் பகுதிகளில் சாதாரண மக்களுக்கும் காப்பீட்டை விரிவாக்கம் செய்ய அரசு உறுதிபூண்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், கேரளா ஆகிய மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிகோபார் யூனியன்பிரதேசத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ் கணக்கீட்டுப் படிவங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

வரைவு வாக்காளர் பட்டியல் இம்மாதம் 23ஆம் தேதி வெளியிடப்படுகிறது.

<<<<>>>>

நாட்டில் 6 ஆயிரத்து 117 ரயில் நிலையங்களில் இலவச Wi-Fi வசதி அளிக்கப்படுவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இந்த சேவையை பெறுவதற்காக தனிப்பட்ட தகவல் ஏதும் கேட்கப்படுவதில்லை என்று கூறினார்.

ரயில் நிலையங்களில் **Wi-Fi** வசதிகள் தொடர்பாக ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் ரயில்வே நிர்வாகம் அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

ரயில் நிலையங்கள் மற்றும் ரயில் பெட்டிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

இதுவரை ஆயிரத்து **731** ரயில் நிலையங்கள் மற்றும் **11** ஆயிரத்து **953** ரயில் பெட்டிகளில் பயணிகளின் பாதுகாப்புக்காக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தில்லி ரயில் நிலையத்திற்குள்ளே செல்லும் பகுதியிலும், வெளியேறும் பகுதியிலும், நடைமேடைகள், பயணிகள் காத்திருப்பு அறைகள், பயணச்சீட்டு வழங்கும் பகுதிகள் ஆகியவற்றில் ஏற்கனவே கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அந்த ரயில் நிலையத்தின் சில பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், அங்கும் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

தில்லி ரயில் நிலையத்தில் மட்டும் 250 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் இன்று காலை 6 மணியளவில் காற்றின் தரம் மிகவும் மோசமாக இருந்தது. காற்றின் தரக் குறியீடு 356 புள்ளியாக பதிவானது என்று மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மிகவும் மோசமான காற்று மாசுபாட்டைக் குறைக்கும் வகையில் தலைநகர் தில்லியில் மாசுக் கட்டுப்பாட்டு சான்றிதழ் இல்லாத வாகனங்களுக்கு இன்று முதல் எரிபொருள் வழங்கப்படமாட்டாது என்று தில்லி அரசு அறிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு இதற்கான அறிவிக்கையை தில்லி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. Manjinder Singh Sirsa வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து கண்காணிக்குமாறு காவல்துறையினருக்கும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

தில்லிக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட BS-VI ரகம் அல்லாத வாகனங்கள் தில்லிக்குள் நுழையவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அமைதிப் பேச்சுகளின்போது ரஷ்யாவின் கோரிக்கைகளை யுக்ரைனும் அதன் மேற்கத்திய கூட்டு நாடுகளும் நிராகரித்தால், ரஷ்யா தமது ஆதிக்கத்தை யுக்ரைனில் நீட்டிக்கும் என்று அதிபர் திரு. விளாடிமிர் புதின் எச்சரித்துள்ளார்.

உயர் ராணுவ அதிகாரிகளுடனான ஆண்டுக்கு கூட்டத்தில் உரையாற்றிய அவர், ரஷ்யா தமது நோக்கங்களை அடையவும், இருநாட்டுக்கு இடையிலான மோதல்களை தூதரக ரீதியில் களையவும் விரும்புவதாகத் தெரிவித்தார்.

அமைதி ஒப்பந்தத்தில் யுக்ரைன் கையெழுத்திட மறுத்தால் ராணுவ நடவடிக்கையின் மூலம் ரஷ்யா தமது நிலத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் என்று அதிபர் திரு. விளாடிமிர் புதின் எச்சரித்துள்ளார்.

இதற்கிடையே நேட்டோ நாடுகளுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு உத்தரவாதத்தை அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் யுக்ரைனுக்கும் அளித்தால் தமது நாடு நேட்டோவில் உறுப்பினராக சேரும் முயற்சி கைவிடப்படும் என்று அதிபர் திரு. ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசம், உத்தரப்பிரசேதம், பிஹார், ஜார்கண்ட் மற்றும் ஒடிசா மாநிலங்களின் சில பகுதிகளில் **2** நாட்களுக்கு கடும் பனிமூட்டம் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் இன்று மிக அதிகளவில் பனிமூட்டம் காணப்படும் என்று எச்சரித்துள்ளது.

மத்தியப்பிரதேசத்தின் மேற்குப்பகுதி மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களில் நாளை வரை குளிர் நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையே ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக்கில் அடுத்த ஒரு வார காலத்திற்கு லேசான மழை பெய்யும் என்றும், பனிப்பொழிவு இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை **Roll Ball** சாம்பியன் போட்டியில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் பிரிவினர், கென்ய அணியினரை எதிர்கொள்கின்றனர்.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 6-2 என்ற கோல் கணக்கில் எகிப்தை வென்றது.

மகளிர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஈரானை வென்றது.

**<<<<The End>>>>**